மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

டிசம்பர் 2015

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான செய்தி மடல் 2



தலைமைத்துவ பயிற்சி பெற்ற குழுவினர்

## கல்வி நிலையங்களில் மாணாக்கர் தலைமைத்துவம் சிறப்பிதழ்

உன்னால் முடியும்
என்று எண்ணுவதையோ
அல்லது
முடியும் என்று
கனவு காண்பதையோ
துணிந்து தொடங்கு.
உனது துணிவிலேயே
அறிவும், ஆற்றலும்,
மந்திரமும்
அடங்கியுள்ளன

நன்கொடை ₹10/-

தனிச்சுற்றுக்கு மட்டும்












**தலைமைத்துவம் பயிலும் மாணவ மாணவியர்கள் மற்றும் வழிநடத்துபவர்களின் கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், ஓவியங்கள், அனுபவங்கள், பழமொழிகள், நிகழ்வுகள் வரவேற்கப்படுகின்றன.**

**அனைத்து படைப்புகளும் பெயர், முகவரி, தொலைபேசி மற்றும் புகைப்படத்துடன் அனுப்பப்பட வேண்டும். படைப்புகள் தங்களுடையதாக இருக்கவேண்டும்.**

**உங்கள் கிராமத்தில் அல்லது உங்கள் பள்ளியில் உங்களின்**

**"ஆகா"**

**தலைமைத்துவ அனுபங்களை ஒரு பக்கதிற்கு மிகாமல் எழுதி, உங்கள் புகைப்படத்துடன் அனுப்புங்கள். சிறந்ததாக உள்ள படைப்புகள் உங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

## ஆசிரியர் குழு


**சுந்தர். G.**
செயல் இயக்குநர்
ALC பள்ளி மேம்பாட்டுத் திட்டம்

**D. சைலட் மோனி**
ஆலோசகர்
ALC பள்ளி மேம்பாட்டுத் திட்டம்

**ஜோசப் சகாயராஜ்**
ஆங்கிலம் பயிற்றுவிப்பாளர்
விஷன் குளோபல் எம்பவர்மெண்ட்

**S. டெய்சி டயானா**
மாணவி
டி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
சீலோவாம்

**S. அருளரசி**
மாணவி
டி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
சீலோவாம்


## பொருளடக்கம்


| | |
|---|---|
| விஷன் குளோபல் கடிதம் | 3 |
| மாணாக்கர் தலைமைத்துவம் | 5 |
| பள்ளியில் சிறந்த தலைவனாகவோ/ தலைவியாகவோ செயல்படுகிறாயா? | 7 |
| டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் | 9 |
| பொது அறிவு கேள்வி-பதில்கள் | 11 |
| தலைவனாகு போட்டி – விடைகள் | 12 |
| உற்சாகமூட்டும் பழமொழிகள் | 14 |
| மாணாக்கர்களின் தலைமைத்துவம் | 15 |
| தலைமைத்துவ பயிற்சிகள் | 16 |
| சாதனை சுவடுகள் – பிரித்திகா யாஷினி | 17 |



**நன்கொடைகள், விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**

| | | |
|---|---|---|
| முன் அட்டை உட்புறம் | – | ரூ. 2000/- |
| பின் அட்டை வெளிப்புறம் | – | ரூ. 3000/- |
| பின் அட்டை உட்புறம் | – | ரூ. 2000/- |
| முழு உள் பக்கம் (Multicolour) | – | ரூ. 1000/- |
| முழு உள் பக்கம் (one colour) | – | ரூ. 500/- |

**Visions Global Empowerment**
*A global nonprofit organization serving youth and communities through education*

November 20, 2015

Dear Friends,

As we near the end of 2015, now is a good time to reflect on everything that has happened this past year and to plan for the year ahead. I hope you will take this opportunity to start thinking about how you plan to make 2016 great…for you and for others. We all have unique abilities and gifts that we can share with the rest of the world, and I would encourage you to explore and develop those abilities and gifts and put them to use in serving others.

Understanding what "leadership" means to you is a very personal experience. To me, leadership is about two things – 1) developing your own talents, gifts, abilities, skills, and interests, and 2) putting those things to good use in the service of others. Essentially, leadership is improving yourself so that you can improve the lives of others.

With a new year just around the corner, I challenge and invite you all to stand up as leaders in your respective schools and dare to make a difference. There are many ways you can improve the situation at your school and help support other students, such as:

- Organize **waste clean-up** sessions or **install waste bins** for regular waste, recycling, composting, etc.
- Organize **tutoring** sessions with students who are falling behind academically
- Create a **mentoring** network that pairs older students with younger students
- Plan a **rally or campaign** around an important cause
- Work with your school's staff in organizing **fun, social events** that promote school spirit, such as a games or dance competition, fair, cultural show, etc.
- **Recognize your teachers** and school staff on Teacher Appreciation Day
- **Share what you have learned about leadership** from trainings you have attended
- **Plant trees or plants** around your school campus
- Organize a **community service project**
- **Befriend someone** who is often sitting alone or is left out of group activities

Your actions need not be huge to make a difference. Oftentimes it is the little, day-to-day actions that make all the difference, such as being understanding of your fellow students and what they might be going through in life; or standing up and volunteering to help your teachers or help another student who may be struggling or having a difficult time.

The power to make a difference lies with you! If you choose to do so, you can be a force for good at your school. The challenge is on – how will you make a difference??

Wishing you all the best,

A 501(c)(3) registered charitable organization in the U.S. (federal tax ID# 26-3386678)
1621 Barry Ave. #PH1, Los Angeles, CA, 90025
www.VisionsGlobalEmpowerment.org

Visions Global Empowerment

*A global nonprofit organization serving youth and communities through education*

*டிசம்பர் 15, 2015*

அன்பு நண்பர்களே,

2015-ம் வருடத்தின் இறுதியில் நாம் உள்ளோம். இந்த வருடம் நடைபெற்ற நிகழ்வுகளை இத்தருணத்தில் நினைவு கூர்வதும் அலசிப் பார்ப்பதும் பொருத்தமானதாக இருக்கும். நீங்கள் ஒவ்வொருவரும் 2016-ம் வருடம் சிறப்பானதாக அமைய திட்டமிட துவங்கியிருப்பீர்கள் என நம்புகின்றேன்.

நமக்கு உன்னதமான திறமைகளும் கொடைகளும் உள்ளன. அவைகளை நாம் உலகில் உள்ள அனைவரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும். உங்களிடம் உள்ள திறமைகளை நீங்கள் மேன்மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். நம்முடைய திறமைகளும் நாம் பெற்றிருக்கும் கொடைகளும் எப்போதும் பிறருக்கு உபயோகப்படுவதாக அமைந்திட வேண்டும்.

தலைமைத்துவத்தைப் பற்றிய புரிதல் நம்முடைய அனுபவத்தின் அடிப்படையில் அமைகின்றது. என்னைப் பொறுத்தவரை தலைமைத்துவம் என்பது இருசெயல்பாடுகளை குறிக்கின்றது. ஒன்று: நம்முடைய சொந்த திறமைகளை, அறிவை, விருப்பங்களை, கொடைகளை மேம்படுத்துவது; இரண்டு: மேம்படுத்திய திறமைகளை பிறருடைய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பது.

தலைமைத்துவம் என்பது நம்மை திறமையானவர்களாக வளர்த்தெடுத்து பிறரின் வாழ்வு மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்பது ஆகும்.

2016-ம் வருடம் இன்னும் சில நாட்களில் உதயமாகும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பள்ளிகளில், கல்லூரிகளில், கிராமங்களல் தலைவனாக உருவாக வேண்டும் என அறைகூவல் விடுகின்றேன். பல்வேறு வழிகளில் நீங்கள் தலைமைத்துவம் ஏற்று உங்கள் பள்ளிகளின், கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உதவ முடியும், உடன்பயிலும் மாணாக்கர்களுக்கு உதவ முடியும்.

உதாரணமாக...

- **குப்பைகளை அகற்றவும், மறுசுழற்சி செய்யவும் முயலுங்கள்,** அதற்காக குப்பைத் தொட்டிகளை அமையுங்கள்.
- கற்கும் திறன் குறைவாக உள்ள **மாணாக்கர்களுக்கு சிறிது நேரம் கற்றுக் கொடுங்கள்.**
- "வழிகாட்டி" அமைப்பு ஒன்றை ஏற்படுத்துங்கள். அதாவது **மூத்த மாணவர்கள் இளைய மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.**
- சமூகப் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு **ஊர்வலங்கள், பிரச்சாரங்களுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.**
- **ஆசிரியர்களுடன் இணைந்து பள்ளிகளில் சமூக நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.** (உதாரணமாக கலை நிகழ்வுகள், போட்டிகள், நிதி திரட்டும் நிகழ்வுகள் போன்றவைகள்)
- ஆசிரியர் தினத்தன்று **ஆசிரியர்களை பாராட்டும் விதமாக** நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- தலைமைத்துவ பயிற்சிகளின்போது **கற்றுக் கொண்டவைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**
- இயற்கையை பேணி பாதுகாத்திட **மரம் நடுங்கள்.**
- உங்கள் பள்ளி/கல்லூரி அமைந்துள்ள கிராமங்களில் சமூகப் பணிகளை திட்டமிட்டு செயல்படுத்துங்கள்.
- யாருடனும் பேசாமல் ஒதுங்கியே இருக்கும் மாணாக்கர்களை இனங்கண்டு அவர்களை நண்பர்களாக்குங்கள்.

மாற்றம் ஏற்படுத்திட நம்முடைய செயல்பாடுகள் மிகவும் பெரியதாக இருக்க வேண்டியதில்லை. **சின்ன சின்ன செயல்பாடுகளே மாற்றங்களுக்கு அடிப்படை.** தனிமைப்படுத்தப்பட்ட மாணவனை நண்பனாக்குவது, ஆசிரியருக்கு உதவுவது போன்ற சிறு செயல்கள் எல்லாம் தலைமைத்துவத்தின் வெளிப்பாடே மாற்றம் கொணர்வது உன் கையில் உள்ளது. நீ நினைத்தால் பள்ளிக்கூடத்தில் நீ சிறப்பான ஓர் சக்தியாவாய். **சவால்கள் உன் முன்னே! எப்படி மாற்றம் கொணரப் போகிறாய்?!**

*வாழ்த்துக்களுடன்...* **கிரேக் பியு**

**Greg Buie**
Executive Director
Vision Global Empowerment

சிறப்புக் கட்டுரை



S. ஜெரால்டு

# கல்வி நிலையங்களில் மாணாக்கர் தலைமைத்துவம்



அன்பு தம்பிகளே! தங்கைகளே! வணக்கம்.

இந்தக் "கனவு" இதழ் மூலம் உங்களைச் சந்திப்பத்தில் மிக்க மகிழ்ச்சி.

நம் தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் அடுத்த வருடம் நடைபெறப் போகும் சட்டமன்றத் தேர்தல் பற்றி தான் ஒரே பேச்சு. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் முதல்வர் நாற்காலியை அலங்கரிக்கும் கனவில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக பல்வேறு கூட்டணிகளை ஏற்படுத்தி, வியூகங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். நமது நாட்டில் தலைவர்களுக்கு பஞ்சமில்லை. ஆனால் மக்களுக்காக பாடுபடுகிற நல்ல தலைவர்களுக்குத்தான் பஞ்சம்.

ஆம்... தலைவன் ஆகவேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் இருக்கின்றது. தலைவர்களாக யாரும் பிறப்பதில்லை. மாறாக தங்களையே உருவாக்கிக் கொள்கிறார்கள். வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் விதம், அதனை சமாளிக்கும் திறன், எதிர்படுகின்ற சவால்களை எல்லாம் சாதனையாக மாற்றும் விடா முயற்சி, சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை - இவைகளெல்லாம் ஒருவனை தலைவனாக்கி சிகரத்தில் நிற்க வைக்கிறது.

நீயும் தலைவனாக மாறவேண்டுமா? சிகரத்தில் ஏறி சாதனைகளை படைத்து சரித்திரத்தில் இடம்பெற வேண்டுமா? பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் எங்களால் இது முடியுமா? தலைவர்களாக மாறினால் எங்களுக்கு என்ன நன்மை கிடைக்கிறது? போன்ற கேள்விகள் உங்கள் மனதில் எழுவது இயற்கைதான்.

யானை தனது சக்தியினை உணர்ந்து நடந்தால் அந்த காடே தாங்காது என்பது உண்மை. நீயும் அது போலத்தான். உன்னிடம் சக்தி உண்டு, ஆற்றல் உண்டு. அதனை முழுமையாக உணர்ந்து கொள்.

**தன்னை தானும் அறிந்து கொண்டு ஊருக்கு சொல்லுபவர்கள் தலைவர்கள் ஆவதில்லையா?** என்பது ஒரு திரைப்படப் பாடல். உன் திறமை எதில் இருக்கிறது? என்பதை உணர்ந்துகொண்டு அதில் முழுமையாக உன்னை ஈடுபடுத்திக் கொள். மக்களுக்காக பணி செய்ய விரும்புகிறாயா? பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடு, அவர்கள் சொல்வதைக் கேள். கவிதை எழுத ஆர்வமாக இருக்கின்றாயா? பள்ளியில் நடைபெறும் இலக்கிய மன்றங்களில் பங்கெடுங்கள். பள்ளியில் வெளிவரும் கையெழுதது பத்திரிக்கையில் எழுதலாம். இதன்மூலம் உன் திறமையினை வெளிக்கொணர்ந்து வீர நடை போடலாம்.

## அறிவினை வளர்த்துக் கொள்

தலைவனாக விரும்பும் நீ உன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளைப் பற்றிய அறிவினை வளர்த்துக் கொள். பத்திரிக்கைகள், நல்ல புத்தகங்கள், பெரியவர்களின் உரைகளைக் கேட்பது, பள்ளியில் நடைபெறும் பட்டிமன்றங்கள், விவாதமேடைகளில் பங்கெடுப்பதன் மூலம் உன் அறிவினை நீ வளர்த்துக் கொள்ள முடியும்.

## அனுபவத்தினைப் பெற்றுக்கொள்

ஒரு துறையில் சிறந்தவனாக உன்னை நீ உயர்த்திக் கொள்ளுமுன் அடிப்படையான அனுபவ அறிவினை பெற்றுக் கொள்ளத் தயங்காதே.

உதாரணமாக, பள்ளியில் நடைபெறும் பத்திரிக்கைக்கு தலைமை எழுத்தராக நீ வரவேண்டும் என விரும்பினால் முதலில் கீழிருந்து உன் பணியைத் தொடங்கு. முதலில் செய்தி சேகரிப்பவனாக, எழுத்துப் பிழைகள் திருத்துபவனாக உன் பணியைத் தொடங்கு. அதிலிருந்து நீ கற்றுக் கொள்ளும் பாடங்கள் ஏராளம். அதன்மூலம் நீ பெறும் அனுபவம் உன்னை சிறப்பாக பணி செய்ய வழி செய்யும்.

நீ படித்துக் கொண்டிருக்கும் பள்ளிக்கூடம் அதற்கான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அத்தகைய சூழலை உனக்கு சாதகமாக எப்படி பயன்படுத்தலாம்? என்று சிந்திக்கலாமா?

முட்டாளின் முழு வாழ்க்கையும் புத்திசாலியின் ஒரு நாள் வாழ்க்கைக்கு சமம் ★அரேபிய பழமொழி

## தலைமைக்கு முதல் மரியாதை

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்கு இடம் தேடி அலைகின்ற உனது நண்பர்கள் பலரை நீ பார்த்திருப்பாய். எவ்வளவோ மதிப்பெண்கள் எடுத்தும் கல்லூரிகளில் எளிதாக இடம் கிடைப்பதில்லை. மாறாக மதிப்பெண்களுடன் விளையாட்டு, பள்ளி சார்ந்த அமைப்புகள், குழுக்கள் இவைகளில் தன்னை ஈடுபடுத்தி முதலிடம் பெற்று தன்னை உயர்த்திக் கொண்டவர்களை கல்லூரிகள் மட்டுமல்ல, வேலைவாய்ப்பு நிறுவனங்களும் இருகரம் கூப்பி வரவேற்கக் காத்திக்கிறது என்பதை மறந்துவிடாதே. தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்பவர்களுக்கு என்றுமே சமூகத்தில் முதல் மரியாதைதான்.

# பள்ளி சூழலில் எப்படி தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்ளலாம்

## சுயமதிப்பினை உருவாக்கு

உன்னைப் பற்றிய உயர்வான எண்ணத்தினை முதலில் நீ உருவாக்கிக் கொள். கடின உழைப்பு, பள்ளி அளவில் பல பொறுப்புகளை திறம்பட ஏற்றுக் கொள்வது, உன்னை மற்றவர் பாராட்டும்படி நடந்து கொள்வது உன்னைப் பற்றிய சுய மதிப்பினை உருவாக்கும்.

## உன் திறமையை வளர்த்துக் கொள்

யானையின் பலம் நம் எல்லோருக்கும் தெரியும். அதன் பிரமாண்டமான உருவம் அனைவரையும் பிரமிக்க வைக்கக்கூடிய ஒன்றாகும். ஆனால் அந்த யானையை தெருதெருவாக கொண்டு வந்து பிச்சை எடுக்க வைப்பதை நாம் பார்த்திருப்போம். பிச்சை எடுப்பதற்கு யானையா? ஆம் யானை தன் பலத்தினை, சக்தியினை உணராமல் இருப்பதால்தான் இந்த அவல நிலை.



## குழுவுடன் இணைந்து செயல்படு

உன் வகுப்பு தோழர்கள், பள்ளியில் படிக்கும் மாணவ/மாணவியருடன் குழுவாக இணைந்து செயல்படும் விந்தையை கற்றுக் கொள். அவர்களுடன் கலந்துரையாடுவது, செவி கொடுத்து கேட்பது, கேள்விகள் கேட்பது மூலமாக குழுவினர் உன்னை மதிக்கும்படியாக, நம்பும்படியாக உன்னை நீ உயர்த்திக் கொள். பத்தோடு பதினொன்று, அத்தோடு நீயும் ஒன்று என்று இராமல் உனது தனித்தன்மையை குழுவில் காட்டு.

## செயலில் காட்டு

- **உனது கனவு / குறிக்கோள் / இலட்சியம் என்ன? என்பதை தீர்மானித்துக் கொள்.**
- **கனவுகளை நோக்கியே உன் பயணம் இருக்கட்டும்.**
- **வெறும் வாய்ச்சொல் வீரனாக, வீணாக பொழுதைப் போக்காதே.**
- **செயல்வீரனாய் உன்னை முன்னிறுத்து.**

## நீ ஒரு நம்பிக்கை நட்சத்திரம்

உனது வகுப்பில் உன்னுடன் பயிலும் மாணவ / மாணவியரை சற்று நினைத்துப் பார். பல்வேறு குடும்ப சூழல், சமுதாய வகுப்பினைச் சார்ந்தவர்கள் அவர்கள். பல்வேறுவிதமான சமய நம்பிக்கைக் கொண்டவர்கள், பல்வேறு பண்புகளை, குணங்களை உடையவர்கள்.

அனைவருக்கும் நம்பிக்கையான ஒருவரை தங்களது முன்மாதிரியாக பார்க்க விரும்புகிறார்கள். அந்த நம்பிக்கை நட்சத்திரமாக நீ ஏன் இருக்கக் கூடாது. உலகமே உன் பார்வையில் வரும்.

## உன் தலைமை பண்புகளை வளர்க்க...

- **அறிவியல், கணிதம் மற்றும் பாடம் சம்பந்தமாக குழுக்கள் அல்லது மன்றங்களில் உன்னுடைய பங்கேற்பினை உறுதி செய்.**
- **நடனம், இசை போன்ற கலைகளை வளர்க்கும் மன்றங்களில், பட்டிமன்றங்களில், விவாத மேடைகளில் உன் திறமைகளைக் காட்ட மறக்காதே.**
- **பள்ளியில் நடைபெறும் விளையாட்டுக்கள், போட்டிகளில் பங்கெடுத்து முதன்மையான இடத்தை எட்டிப் பிடிக்கப் பார்.**
- **உனது வயதை ஒத்த நண்பர்கள் சேர்ந்த குழுவுடன் இணைந்து, கல்வியில் பின்தங்கிய தோழனுக்கு சிறப்பு கவனம் செலுத்த மறந்துவிடாதே.**
- **பள்ளியளவில் நடைபெறும் பத்திரிக்கைகள், கைப்பிரதிகள், இலக்கிய இதழ்களில் உன் எழுத்துத் திறமையினை அனைவருக்கும் எடுத்துக் காட்டு.**
- **பள்ளி நேரம் தவிர்த்து, மாலையில் உன் நண்பர்கள் குழுவுடன் இணைந்து அல்லது குழந்தைகள் பாராளுமன்றம் மூலமாக பள்ளியை சுற்றி வாழும் மக்களுக்கு நலத்தொண்டுகள் ஆற்ற முன்வரலாம்.**


**ஆம்....**
**உன்னைச் சுற்றி எத்தனையோ வாய்ப்புகள்...**
**ஒன்றையும் தவறவிடாதே, பயன்படுத்திக் கொள்.**

*பாதையில் பயணம் செய்வதைவிட*
*உனது பாதங்கள் ...*
*புதிய பாதைகளை உருவாக்கட்டும்*

*அப்படி நீ தலைவனாக மாறும்போது*
*உலகமே உன் பின்னால் வரும் ...*

## பள்ளியில் சிறந்த

# தலைவனாகவோ/தலைவியாகவோ செயல்படுகிறாயா?



கீழ்கண்ட கேள்விகளுக்கு
உள்ளபடி பதில் தேர்ந்தெடு...
உன்னையே அறிந்திடு...

M.K. கீர்த்தனா

01. வகுப்பறையிலோ அல்லது விளையாட்டு மைதானத்திலோ குப்பை கிடந்தால்

a) உடனே நான் சென்று அகற்றுவேன்
b) கண்டும் காணாமல் சென்றுவிடுவேன்
c) மற்றவரை எடுக்குமாறு கூறுவேன்
d) மறுநாள் சுத்தம் செய்யலாம் என்று விட்டுவிடுவேன்

02. உன் தவறை பிறர் சுட்டிக்காட்டும்போது

a) கோபப்பட்டு அவர்களுடன் சண்டையிடுவேன்
b) தனியே சென்று அழுவேன்
c) தவற்றை திருத்திக் கொள்வேன்
d) அவரை பழிவாங்க நினைப்பேன்

03. ஆசிரியர் இல்லாத நேரத்தில் மாணவர்களை

a) அமைதியாய் பார்த்துக் கொள்வேன்
b) எனக்கென்ன என்று விட்டுவிடுவேன்
c) கண்டிப்புடன் அவர்களை அமைதிப்படுத்துவேன்
d) ஆசிரியரை அழைத்து வர சென்றிடுவேன்

04. குழு செயல்பாடுகளின்போது

a) அனைவர் கருத்தையும் கேட்டு அதன்படி செயல்படுவேன்
b) அமைதியாக இருப்பேன்
c) அவர்கள் கருத்தை கேட்காமல் நானாகவே செய்வேன்
d) உனக்கு ஒன்றும் தெரியாது என அவர்களிடம் கூறிவிட்டு நான் மட்டும் செய்வேன்

05. போட்டியில் தோல்வி அடைந்தால்

a) தோல்விக்கான காரணம் கண்டு செயல்படுவேன்
b) தோற்றுவிட்டேன் என மனம் நொந்து அழுவேன்
c) போட்டிகளில் இனி கலந்து கொள்ள மாட்டேன்
d) தோல்விக்கான காரணம் இவன்/ள்தான் என்று மற்றவர் மீது பழி கூறுவேன்

06. வகுப்பில் மாணவர் பேசினால்

a) உடனடியாக அவர்களை அழைத்து மற்ற மாணவர் முன்னால் அவமானப்படுத்துவேன்
b) ஆசிரியரிடம் சொல்லி அடிவாங்க வைப்பேன்
c) நானும் பேசுவேன்
d) பேசக்கூடாது என்று அன்புடன் கூறுவேன்

07. தோழன் / தோழி போட்டிகளில் வெற்றி பெற்றால்

a) பொறாமைப்படுவேன்
b) அவருடன் சேர்ந்து வெற்றியைக் கொண்டாடுவேன்
c) மனதில் மட்டும் வைத்துக்கொண்டு வெளியே அவனைப்பற்றி நன்றாக பேசுவேன்
d) அவனை / அவளை பழிவாங்க நினைப்பேன்

08. முதல் மதிப்பெண் பெற்றால்

a) தலைக்கணம் கொள்வேன்
b) என்னை நானே புகழுவேன்
c) மேலும் அதிக மதிப்பெண் எடுக்க முயற்சிப்பேன்
d) நான் மட்டும்தான் அறிவாளி என மற்றவர்களை கேலி செய்வேன்

09. ஒரு செயலை செய்ய அழைக்கும்போது

a) இதுவரை நான் செய்ததில்லை என மறுத்துவிடுவேன்
b) இதுவரை முயன்றதில்லை என்றும், முயன்று செய்வேன் என்றும் தைரியமாக செயல்படுவேன்
c) தவறு ஏற்பட்டால் நான் தெரியாது என்று கூறினேனே என்று கூறி விலகி விடுவேன்
d) தவறு ஏற்பட்டாலும் தொடர்ந்து செய்ய மறுபடி முயன்று செயல்படுவேன்

10. ஒரு நிகழ்ச்சிக்காக பிற பள்ளிகளுக்கு செல்லும்போது

a) ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்றால் தைரியமாக பேசுவேன்

b) முடிந்த அளவு ஆங்கிலத்தில் தைரியமாக பேசுவேன்

c) ஒருவேளை என்னால் சரியாக பேச முடியாதோ என்று தயக்கத்துடன் விலகிவிடுவேன்

d) மற்றவர்கள் பற்றி கவலைப்படாமல் தமிழிலேயே தைரியமாக பேசுவேன்

## விடைகள்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | 5 | 3 | 5 | 5 | 5 | 1 | 0 | 0 | 0 | 1 |
| b | 0 | 1 | 0 | 0 | 3 | 3 | 5 | 3 | 3 | 5 |
| c | 3 | 5 | 1 | 3 | 0 | 0 | 3 | 5 | 1 | 0 |
| d | 1 | 0 | 3 | 1 | 1 | 5 | 1 | 1 | 5 | 3 |

### நீங்கள் பெற்ற மதிப்பெண்கள்

**45-க்கு மேல் :** உனது பள்ளியில் தலைவன்/தலைவி ஆக உனக்குத் திறமை உண்டு. மேலும் உன் வாழ்க்கையில் முன்னேற வாழ்த்துக்கள்.

**30-45 வரை :** நீங்கள் சற்று முயற்சித்தால் தலைவர்க்கான பண்பினைப் பெறலாம்.

**30-க்கு கீழ் :** கீழ்கண்டவற்றை உன் வாழ்வில் நடைமுறைப்படுத்தினால் நீயும் ஆகலாம் சிறந்த தலைவர்.

## வெற்றி சிந்தனைகள்

1. திட்டமிடுவதும், அதன்படி நடப்பதும் வெற்றி தரும்.
2. வெற்றி பெற எண்ணுபவர் சோர்வதுமில்லை, தடுமாறுவதும் இல்லை.
3. முடியும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டால் எந்த தடைக்கும் அஞ்சாமல் முன்னேறலாம்.
4. உனக்கு நீயே ஆணை பிறப்பித்து செயல்பட்டு வெற்றி பெறு. மற்றவரின் ஆணைக்காக காத்திருக்காதே.
5. இன்றைய விஞ்ஞான உலகத்திற்கு ஏற்றபடி மாற முயற்சி செய்.
6. நாளை என்று எதையும் தள்ளாதே.
7. என்றும் தன்னம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.
8. இலக்கை நோக்கி பயணிக்கும்போது கவனம் சிதறாமல் ஒரே நேராய் இருக்க வேண்டும்.
9. மனதை ஒருநிலைப்படுத்த இப்பொழுதே பழக்குங்கள். வெற்றி தானாய் வரும்.
10. பெரியவர்களுக்குக் கீழ்படிதல் உள்ள பிள்ளையாக இருக்க வேண்டும்.



## தலைவனாகு போட்டி

### கூறியது யார்?

1. கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்

2. சிறிய தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது

3. நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே

4. தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன்தான் மாமனிதன்!

5. நீ ஒழுக்கம் உள்ளவனா இருந்தால் கவலையே வராது. நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது. நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது

**விடைகளை உங்கள் பெயர், படிக்கும் வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியுடன் எழுதி அனுப்புங்கள்.**

**பரிசு உண்டு**



தலைவர்களை அறிந்து கொள்வோம்

# டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

விடுதலை இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர். இவர் ஒரு சமூக சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச் சிறந்த பொருளியல் அறிஞராகவும், அரசியல் தத்துவ மேதையாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், பகுத்தறிவு சிந்தனையாளராகவும், சிறந்த எழுத்தாளர் மற்றும் பேச்சாளராகவும், வரலாற்று ஆசானாகவும் விளங்கியவர். தலித் இன மக்களுக்கு மட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விருளைப் போக்க உதித்த சூரியன். மகாத்மா காந்திக்கு பிறகு, சுதந்திர இந்தியாவின் மாபெரும் தலைவர் என்று போற்றப்பட்டவர் டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் அவர்கள். தன் வாழ்நாள் முழுவதையும் சமூகத்திற்கென அர்ப்பணித்த டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை காண்போம்.

**பிறப்பு:** ஏப்ரல் 14, 1891

**இடம் :** மாவ், உத்தரபிரதேசம் (இப்போது மத்திய பிரதேசத்தில் உள்ளது) பிரிட்டிஷ் இந்தியா.

**பணி :** இந்திய சட்ட அமைச்சர், இந்திய அரசியலமைப்பு வரைவுக்குழுவின் தலைவர்.

**இறப்பு:** டிசம்பர் 6, 1956

பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் என அழைக்கப்படும் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்கள் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள், இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள மாவ் (இப்போது மத்தியபிரதேசத்தில் உள்ளது) என்ற இடத்தில், ராம்ஜி மாலோஜி சக்பாலுக்கும், பீமாபாயிக்கும் பதினான்காவது குழந்தையாக, ஒரு மராத்திய குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

## ஆரம்ப வாழ்க்கை மற்றும் கல்வி

மகர் என்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த பீம்ராவ் ராம்ஜி அவர்கள், சாத்தாராவில் உள்ள ஒரு பள்ளியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இளம் வயதில் தனி மண்பானையில் தண்ணீர் குடிப்பது, குதிரை வண்டியில் போகும்போது, தாழ்த்தப்பட்ட பிரிவினர் என்றதும் இறக்கிவிடப்பட்டது, பள்ளியில் படிக்கும்போது ஒதுக்கிவிடப்பட்டது என பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தார். ஆனால் மகாதேவ் அம்பேத்கர் என்ற பிராமண ஆசிரியர் இவர்மீது அன்பும், அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், தன்னுடைய குடும்ப பெயரான பீம்ராவ் சக்பால் அம்பாவடேகர் என்ற பெயரை பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.

1904ஆம் ஆண்டு இவருடைய குடும்பம் மும்பைக்கு குடிபெயர்ந்தது. அங்கு எல்பின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தார். குடும்பத்தில் மிகவும் வறுமை சூழ்ந்த நிலையிலும், கல்வியை விடாமல் தொடர்ந்த அவர், 1907ஆம் ஆண்டு தனது பள்ளிப் படிப்பை முடித்தார். பிறகு பரோடா மன்னரின் உதவியுடன் மும்பை பல்கலைக் கழகத்தில் இளங்கலை படிப்பை தொடர்ந்த அவர், 1921-ல் அரசியல் அறிவியல் மற்றும்

பொருளாதாரத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றார். சிறிது காலம் பரோடா மன்னரின் அரண்மனையில் படைத் தலைவராகவும் பணியாற்றினார்.

### உயர்கல்வி கற்க அமெரிக்கா பயணம்

பரோட மன்னர் ஷாயாஜி ராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா பயணம் ஆனார். உயர்கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்ற அம்பேத்கர் அவர்கள், கொலம்பியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம் மற்றும் சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார். 1915ல் பண்டைய இந்தியாவின் வர்த்தகம் என்ற ஆய்விற்கு முதுகலைப் பட்டம் பெற்றார். பின்னர் இந்திய லாபப் பங்கு என்ற ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வு என்ற ஆய்வுக்கு, கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. மேலும், 1921ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் அரசு நிதியைப் பரவலாக்குதல் என்ற ஆய்வுக்கு முது அறிவியல் பட்டமும், 1923ஆம் ஆண்டு ரூபாயின் பிரச்சனை என்ற ஆய்வுக்கு டி.எஸ்.சி. பட்டமும் பெற்றார். பிறகு சட்டப் படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

### சமூகப் பணிகள்

1923ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்தியாவிற்கு திரும்பிய அம்பேத்கர் அவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதுமட்டு மல்லாமல், சமுதாய அமைப்பிலும், பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைக்க போராட வேண்டும் என்று முடிவு எடுத்தார். ஜுலை 1924-ல், ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பஹிஸ்கிருத ஹிதகாரிணி சபா என்ற அமைப்பை நிறுவினார். இதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமுதாய உரிமைக்காக போராடினார். 1930-ம் ஆண்டு, லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக புறப்படும் முன் அவர் கூறியது, என் மக்களுக்கு என்ன நியாயமாகக் கிடைக்க வேண்டுமோ, அதற்காக போராடுவேன் என்றும், அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனதுடன் ஆதரிப்பேன் என்றும் கூறினார்.

இரண்டாவது வட்டமேசை மாநாட்டில், பிரதிநிதித்துவம் குறித்த பிரச்சனை முக்கியமாக விவாதிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோருக்கு தனி வாக்குரிமையும், விகிதாச்சார பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார். இதன் விளைவாக ஒரு தொகுதியில் பொது வேட்பாளரை தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும், அதே தொகுதியில் தாழ்த்தப்பட்ட சமூக வேட்பாளரை தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் இரட்டை வாக்குரிமை முறை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

### தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் நடவடிக்கைகள்

வர்ணாசிரம தர்மத்திலிருந்து தோன்றிய சாதியமைப்பையும், தீண்டாமை கொடுமைகளையும் எதிர்த்து தீவிரமாக போராடிய அம்பேத்கர் அவர்கள், 1927-ம் ஆண்டு தாழ்த்தப்பபட்ட மக்கள் மீதான தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்தது போராட்டத்தினைத் தொடங்கினார். பிறகு, 1930-ம் ஆண்டு தொடங்கிய நாசிக் கோயில் நுழைவு போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார். தீண்டாமை என்பது ஒரு சமூகப் பிரச்சனை மட்டுமல்லாமல், அது ஒரு அரசியல் பிரச்சினை எனவும் கருதிய அவர் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தையும் கொண்டு வந்தார். இறுதியில், 1956-ம் ஆண்டு புத்த மதத்திலும் இணைந்தார்.

### விடுதலை இந்தியாவின் அரசியல் அமைப்பில் அம்பேத்கரின் பங்கு

ஆகஸ்ட் 15, 1947 அன்று இந்தியா விடுதலை பெற்ற பிறகு, காங்கிரஸ் அரசு அம்பேத்கரை சட்ட அமைச்சராக பதவி ஏற்றுக்கொள்ளும்படி அழைத்தது. அதன்பேரில், விடுதலைப் பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றார். நவம்பர் 26, 1949 அன்று அம்பேத்கர் தலைமையிலான இந்திய அரசியல் அமைப்பு சட்ட வரைவுக்குழு நாடாளு மன்றத்திடம் சட்ட வரைவை ஒப்படைத்தது. அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்பு குடிமக்களின் உரிமைகளுக்கு பலவகைகளில் பாதுகாப்பை அளிப்பதாக அமைந்ததோடு மட்டுமல்லாமல், இது மிகச்சிறந்த சமூக ஆவணம் என வரலாற்று ஆசிரியர்களால் போற்றப்பட்டது. ஆனால் இச்சட்டத்தை கொண்டு வருவதில் நேருவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், 1951-ம் ஆண்டு தன் பதவியைத் துறந்தார்.

### அம்பேத்கரின் பொன்மொழிகள்

★ ஒரு லட்சியத்தை மேற்கொள்ளுங்கள். அதை அடைவதற்காக விடா முயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள்.

★ ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய சிங்கங்களை அல்ல, ஆடுகளாக இருக்க வேண்டாம், சிங்கங்களைப் போன்று வீறுகொண்டு எழுங்கள்.

★ நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் - அறிவு, இரண்டாவது தெய்வம் - சுயமரியாதை, மூன்றாவது தெய்வம் - நன்னடத்தை.

★ சமூகத்தை உயர்த்தவேண்டும் என்று விழுமிய நோக்கத்தில் உந்தப் படுபவரே உயர்ந்த மனிதர்.

★ வெற்றியோ, தோல்வியோ எதுவாயினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டா விட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும் பொழுது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்.

**இறப்பு**

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு வந்த அம்பேத்கர் அவர்களுக்கு 1955-ல் உடல் நலம் மோசமடைய தொடங்கியது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்த பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 1956-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் நாள் தில்லியிலுள்ள அவருடைய வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும்போதே உயிர் நீத்தார். பௌத்த சமயத்தில் அதிக ஈடுபாடு கொண்டமையால், பௌத்த சமய முறைப்படி இவருடைய உடல் தாதர் சௌபதி கடற்கரையில் தகனம் செய்யப் பட்டது. இவருடைய மரணத்திற்குப் பின் இவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது 1990-ம் ஆண்டு வழங்கப்பட்டது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, விடுதலை இந்தியாவின் அரசியல் சாசனத்தையே வரைந்த மாபெரும் சட்டமேதை பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் பொருளாதாரம், வரலாறு, தத்துவம், சட்டம் என அனைத்து துறைகளிலும் திறமைப்பெற்று விளங்கிய அவர், இந்திய வரலாற்றின் பழமைவாத பக்கங்களைக் கிழித்தெறிந்த மாமனிதர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய், ஈடுஇணைற்ற ஜோதியாய் விளங்கிய சமூகப் போராளி இவர். இப்படிப்பட்ட மனிதரின் வாழ்க்கை, அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்றால் அது மிகையாகாது.





# பொது அறிவு ? பதில்கள்

1. கதக் என்னும் நடனம் எங்கு முதன்மையான நடனமாகக் கருதப்படுகிறது? **•வட இந்தியா**
2. ஆசியாவின் மிக நீண்ட மலைத்தொடர் **•இமயமலைத் தொடர்**
3. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு இதனால் அதிகரிக்கப்படுகிறது? **•குறக்காநான்**
4. இந்தியப் போர்களில் பீரங்கியை முதன்முதலில் பயன் படுத்தியவர் யார்? **•பாபர்**
5. தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்ந்த மாவட்டம் **•சிவகங்கை**
6. டெசிபல் என்பது எதை அளக்க உதவும் **•ஒலியின் அளவு**
7. இந்திய பொருளாதார திட்டமிடுதலில் சேர்க்கப்படாத விடயம் எது? **•மக்கள் தொகை வளர்ச்சி**
8. தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. முதன்முதலில் ஆட்சிக்கு வந்த ஆண்டு **•1977**
9. எந்த பிரிவின் கீழ் நிதி நெருக்கடி பிரகடனப்படுத்தப்படுகிறது? **•விதி 360**
10. சதுப்பு நிலக் காடுகள் காணப்படுவது **•கடற்கரை மற்றும் டெல்டா மாவட்டங்களில்**
11. 1 டிகிரி தீர்க்க ரேகையைக் கடக்க பூமி எடுத்துக் கொள்ளும் நேரம் **•4 நிமிடம்**
12. தமிழ்நாடு அதிக மழைப்பொழிவை பெறக்கூடிய மாதங்கள் **•அக்டோபர் - டிசம்பர்**
13. LCD என்பதன் விரிவாக்கம் **•Liquid Crystal Display**
14. முதல் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் நடந்த ஆண்டு **•1951**
15. ஜனாதிபதி பதவிக்கான தேர்தலை நடத்துபவர்கள் யார்? **•இந்திய தேர்தல் ஆணையம்**
16. மன்னர் திருமலை நாயக்கரின் தலைநகர் எது? **•தஞ்சாவூர்**
17. இரண்டு மதத்தினை சார்ந்த ஆண், பெண் இருவரும் எந்த சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்ளலாமா? ஆம் எனில் அதற்கான சட்டம் எது? **•சிறப்பு திருமணச் சட்டம்**
18. இந்தியாவின் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் உள்ள இடம் **•பெங்களூர்**
19. இந்து என்னும் ஆங்கில நாளிதழைத் தோற்றுவித்தவர் **•ஜி. சுப்பிரமணிய ஐயர்**
20. வெற்றிடத்தில் விரைவாக விழுவது எது? மரப்பந்து / பறவை இறகு / எஃகு பந்து? **•அனைத்தும் ஒரே வேகத்தில் விழும்**

செப்டம்பர் 2015


# தலைவனாகு போட்டி

## விடைகள்

| | பெயர், பிறந்த ஊர், பிறந்த தேதி | சாதித்த மூன்று விஷயங்கள் | உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்கள் |
|---|---|---|---|
|  | **டாக்டர். அம்பேத்கர்**<br>பிறப்பு: 14.04.1891<br>ஊர் : மாவ்<br>மாநிலம் : உத்தரபிரதேசம் (பிரிட்டிஷ் இந்தியா)<br>இறப்பு: 06.12.1956 | 1. 1930 - லண்டன் வட்டமேசை மாநாட்டில் பங்கேற்பு<br>2. 1931 செப்டம்பர் 24 - பூனா ஒப்பந்தம்<br>3. 1949 நவம்பர் 26 - இந்திய அரசியல் சட்டமைப்பு வரைவு சமர்ப்பித்தல் | ❖ தாழ்த்தப்பட்ட மக்களின் சமூகப் போராளி<br>❖ இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்<br>❖ 1956-ல் தீண்டாமைக்கு எதிராக புத்த மதத்தைத் தழுவியது |
|  | **மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி**<br>பிறப்பு: 02.10.1869<br>ஊர் : போர்பந்தர்<br>மாநிலம் : குஜராத்<br>இறப்பு: 30.01.1948 | 1. 200 மைல் கல் தொலைவு கொண்ட உப்பு சத்தியா கிரகம்<br>2. இந்து முஸ்லிம் இடையே சமாதானம் ஏற்படுத்த 21 நாள் உண்ணாவிரதம்<br>3. 1947 ஆகஸ்ட் 15 - இந்தியா சுதந்திரம் பெற பாடுபட்டது. | ❖ அகிம்சை வழிப் போராட்டம்<br>❖ ஒத்துழையாமை இயக்கம்<br>❖ எளிமை, அதிகார துஷ்பிரயோகத்திற்கு பயப்படாமல் இருந்தது |
|  | **இந்திரா காந்தி**<br>பிறப்பு: 19.11.1917<br>ஊர் : அலகாபாத்<br>இறப்பு: 31.10.1984 | 1. முதல் பெண் பிரதம மந்திரி<br>2. வங்கிகளை தேசிய உடைமையாக்கியது<br>3. பதினைந்தரை வருடம் இந்திய பிரதமராக இருந்தது | ❖ முடிவெடுக்கும் திறன்<br>❖ மன்னர்களின் அதிகாரங்களை ஒழித்து, சொத்துக்களை அரசுடமையாக்கியது<br>❖ தானிய உற்பத்தியில் தன்னிறைவு |
|  | **விவேகானந்தர்**<br>பிறப்பு: 12.01.1863<br>ஊர் : கால்கத்தா<br>மாநிலம் : மேற்கு வங்காளம்<br>இறப்பு: 04.07.1902 | 1. இராமகிருஷ்ணா மடம் நிறுவியது<br>2. 1893-ல் உலக மதங்களின் பாராளுமன்றத்தில் சொற்பொழிவு ஆற்றியது<br>3. ஆன்மீகத்திற்கு மறு உருவாக்கம் கொடுத்தது | ❖ சிறந்த சொற்பொழிவாளர்<br>❖ இளைஞர்களை இயக்கும் சக்தி<br>❖ சமத்துவத்தை போதித்தவர் |



வேகமாக செயல்படுவதைவிட விவேகமாக செயல்படுவதுதான் சிறந்தது ★புரூஸ்

| | | | |
|---|---|---|---|
|  | **கிஷான் பாபுராவோ ஹசாரே**<br>பிறப்பு: 15.06.1937<br>ஊர் : அகமத் நகர்<br>மாநிலம் : மகாராஷ்டியா | 1. மது ஒழிப்பு பிரச்சாரம்<br>2. தானிய வங்கி<br>3. நீர் பிடிப்பு மேலாண்மை | ❖ காந்தியவாதி<br>❖ ஊழலுக்கு எதிரான போராட்டம்<br>❖ பலதரப்பினரையும் அழைத்துச் செல்லும் பக்குவம் |
|  | **பகத்சிங்**<br>பிறப்பு: 28.09.1907<br>மாநிலம் : பஞ்சாப் (பிரிட்டிஷ் இந்தியா)<br>இறப்பு: 23.03.1931 | 1. சுதந்திரப் போராளி<br>2. தீவிர எழுத்தாளர்<br>3. பொதுவுடைமை கொள்கையாளர் | ❖ மதம் கடந்த சமத்துவ சமுதாய கனவு கண்டவர்<br>❖ மனிதர்களை கொன்றாலும் கருத்துக்களை கொல்ல முடியாது என்றவர்<br>❖ இளைஞர்களின் விடிவெள்ளி |
|  | **சுபாஷ் சந்திரபோஸ்**<br>பிறப்பு: 23.01.1897<br>ஊர் : கட்டாக்<br>மாநிலம் : ஒரிஸ்ஸா<br>இறப்பு: 18.08.1945 | 1. சுவராஜ் என்ற பத்திரிக்கை நடத்தியவர்<br>2. 1927 காங்கிரஸ் கட்சியின் பொது செயலாளர்<br>3. விடுதலைப் போராளி | ❖ இந்திய நேஷனல் ஆர்மியை வலுப்படுத்தியவர்<br>❖ நிபந்தனையற்ற சுதந்திரம் வேண்டும் என்றவர்<br>❖ அகில இந்திய பார்வர்ட் பிளாக் ஆரம்பித்தவர் |
|  | **டாக்டர். அப்துல் கலாம்**<br>பிறப்பு: 15.10.1931<br>ஊர் : இராமேஸ்வரம்<br>மாநிலம் : தமிழ்நாடு<br>இறப்பு: 27.07.2015 | 1. மிகச்சிறந்த ராக்கெட் விஞ்ஞானி<br>2. இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிவர்<br>3. மிகச் சிறந்த எழுத்தாளர் | ❖ மாணவர்களின் வழிகாட்டி<br>❖ எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்<br>❖ இந்தியாவை கனவு காணச் சொன்னவர். |
|  | **இராஜாராம் மோகன்ராய்**<br>பிறப்பு: 22.05.1772<br>ஊர் : வங்காளம்<br>மாநிலம் : வங்காளம்<br>இறப்பு: 27.09.1833 | 1. உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம் குறித்த சட்டம் இயற்ற காரணம்<br>2. பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்றவர்<br>3. சமூக அவலங்களை நீக்க பிரம்மோ சபா ஆரம்பித்தவர் | ❖ மிகச் சிறந்த எழுத்தாளர்<br>❖ பெண் விடுதலை போராளி<br>❖ மூடநம்பிக்கைக்கு எதிரானவர் |



**டாக்டர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்**

பிறப்பு: 05.09.1888

ஊர் : திருத்தணி

மாநிலம் : தமிழ்நாடு

இறப்பு: 17.04.1975

1. 2-வது இந்திய ஜனாதிபதி
2. தத்துவஇயலையும், இந்து மதத்தினையும் கற்று தேர்ந்தவர்
3. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்

- இவர் பிறந்த தினம் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது
- மிகச் சிறந்த தத்துவ மேதை
- மிகச் சிறந்த சிந்தனையாளர்



**ஆக்னஸ் கோன்ஹா வோயாஹிய**

**அல்பேனியா**

பிறப்பு: 26.08.1910

இறப்பு: 06.09.1997

1. ஏழைகளுக்காய் வாழ்வின் வசதிகளைத் துறந்தவர்
2. மிஷனரிஸ் ஆப் சாரிட்டி சபையை தொடங்கியவர்
3. தொழுநோயாளிகளுக்காக ஆதரவு கரம் நீட்டி பணி செய்தவர்

- மிக எளிமையானவர்
- தொண்டு உள்ளம் கொண்டவர்
- ஏழைகளுக்காகவே வாழ்ந்து இறந்தவர்

## செப்டம்பர் 2015 தலைவனாகு போட்டி

கலந்துகொண்டு பரிசு வென்றவர்கள்


1. **C. ஜெம்மி செல்வகுமாரி,** Warden, D.M. Girls Boarding Home, Siloam, Tirukoilur
2. **S. அருளரசி,** Student, D.M. Girls Hr. Sec. School, Siloam, Tirukoilur
3. **M.K. கீர்த்தனா,** Student, D.M. Girls Hr. Sec. School, Siloam, Tirukoilur
4. **S. டெய்சி டயானா,** Student, D.M. Girls Hr. Sec. School, Siloam, Tirukoilur
5. **P. பவித்ரா,** Student, D.M. Girls Hr. Sec. School, Siloam, Tirukoilur

**Visions Global Empowerment நிறுவனத்தின் வாழ்த்துக்கள்**

## வாழ்வில் மேன்மேலும் உயர்ந்திடுவீர்! தலைவர்களாக ஜொலித்திடுவீர்!!

## உற்சாகமூட்டும் சில பழமொழிகள்

- உப்பிட்டவரை உள்ளவும் நினை.
- சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி.
- சோற்றில் கிடக்கிற கல்லை எடுக்க மாட்டாதவன் ஞானத்தை எப்படி அறிவான்?
- உள்ளூரில் ஓணான் பிடிக்காதவன், ஊருக்கு வெளியே போய் உடும்பு பிடிப்பானா?
- ஆனையை (அல்லது) மலையை முழுங்கின அம்மையாருக்கு பூனை சுண்டாங்கி.
- ஒரு குருவி இரை எடுக்க, ஒன்பது குருவி வாய் திறக்க.
- இட்டவர்கள், தொட்டவர்கள், கெட்டவர்கள் இப்போது வந்தவர்கள் நல்லவர்கள்.
- கை காய்த்தால் கமுகு (பாக்கு) காய்க்கும்.
- ஒரு அடி அடித்தாலும் பட்டுக் கொள்ளலாம், ஒரு சொல் கேட்க முடியாது.
- உங்கள் உறவிலே வேகிறதைவிட, ஒரு கட்டு விறகிலே வேகிறது மேல்.
- தானாகக் கனியாதது, தடிகொண்டு அடித்தால் கனியுமா?
- ஒற்றைக் காலில் நிற்கிறான்.
- பசி வந்தால் பத்தும் பறக்கும்.
- கூழ் குடித்தாலும் கூட்டாய் குடிக்க வேண்டும்.
- எறும்பு ஊற கல் தேயும்.



# மாணவர்களின் தலைமைத்துவம்





பெயர் : **M. சிநேகா**

வகுப்பு : IX std.

கிராமம் : **மேல் சிறுபாக்கம்**


### தலைமைத்துவ பயிற்சியிலிருந்து கற்றுக்கொண்ட பாடம்

எங்கள் கிராமத்தில் 20 மாணவ - மாணவிகளுக்கு எங்கள் ஊக்குநர் திரு. சுரேஷ், தலைமைத்துவ பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார். நானும் அப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றேன். நான் என் அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**பயிற்சி பெற்ற தலைப்பு : "சிக்கல் தீர்வு"**

நம்முடைய வாழ்க்கையில் நாம் பல சிக்கல்களை சந்திக்கின்றோம். நான் என்னுடைய வாழ்க்கையில் சில சிக்கல்களை முன்பு எதிர்கொண்டு மனம் உடைந்தேன், தோல்வி அடைந்தேன். ஆனால் தலைமைத்துவ பயிற்சிக்குப் பிறகு ஒரு சிக்கல் வந்தால், அதற்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும் எனக் கற்றுக்கொண்டேன்.

தலைமைத்துவ பயிற்சியில் **"கட்டத்துக்கு வெளியில் சிந்தித்தல்" (Think out of the box)** என்ற ஒரு சுய பயிற்சியின் மூலம், நான் என் வாழ்க்கையில் கட்டத்துக்குள் சிக்கிக் கொள்ளாமல், கட்டத்துக்கு வெளியில் சிந்தித்து சிக்கலுக்குத் தீர்வு காண கற்றுக் கொண்டேன்.




**முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும் ஆனால் முயலாமை என்றுமே வெல்லாது!**

# மூன்றாம் கட்ட தலைமைத்துவ பயிற்சிகள்




## விஷன் குளோபல்

விஷன் குளோபல் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு. கிரேக் பியூயி அவர்கள் மூன்றாம் கட்ட தலைமைத்துவ பயிற்சியினை ஏ.எல்.சி. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் 24 தலைமைத்துவ கிராம பயிற்சியாளர்களுக்கு அக்டோபர் மாதம் 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் வழங்கினார். இப்பயிற்சியானது திருக்கோவிலூர் சீலோவா மில் நடைபெற்றது.

பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு:

| மண்டலம் | கிராமம் | பயிற்சியாளர் |
|---|---|---|
| திருவண்ணாமலை | 1. கருந்துவம்பாடி | M. சுதா |
| | 2. கொளக்கரவாடி | V. தினகர் |
| | 3. பழங்கோயில் | G. தீபா |
| | 4. மேல் சிறுபாக்கம் | P. சுரேஷ் |
| | 5. கீழ் சிறுபாக்கம் | C. பழனி |
| | 6. வழதலாங்குணம் | பூங்கோதை |
| | 7. சின்ன காங்கையனூர் | அகிலா |
| | 8. மலப்பாம்பாடி | செல்வி |
| | 9. அழகானந்தல் | ஆதித்யா |
| | 10. ஆடையூர் | ஏழுமலை |
| திருக்கோவிலூர் | 11. ஆவியூர் | S. கங்காபாய் |
| | 12. கலர்புரம் | M. செல்வி |
| | 13. வடமருதூர் | B. தேவிக்கலா |
| | 14. இளந்துறை | S. சரத்குமார்<br>வசந்தராஜ் |
| | 15. மேல்வாளை | ஜெயசுதா |
| | 16. காந்திக்குப்பம் | சசிகலா |
| உளுந்தூர்பேட்டை | 17. பாவந்தூர் | புவனேஸ்வரி |
| | 18. குஞ்சரம் | ஆனஸ்ட்ராஜ் |
| | 19. பெரும்பாக்கம் | தமிழ் அமுதம் |
| | 20. கொங்காரயபாளையம் | நிலவரசி |
| | 21. கீழக்கல்பூண்டி | சிவராஜ் |
| | 22. ஆக்கனூர் | வெள்ளையம்மாள் |
| | 23. பாசார் | ராஜலட்சுமி |
| | 24. கூ. கள்ளக்குறிச்சி | S. சுகன்யா |





1. அறநெறிகள், மதிப்பீடுகள், இணக்க நடத்தை, சமூக முறைமைகள்
2. முன்முயற்சியும், பேராவலும்
3. சிக்கல் தீர்வும், முரண்பாடு மேலாண்மையும்,
4. வேறுபாடு
5. மாற்றுத் திறனாளிகளைப் புரிந்து கொள்ளல்

ஆகிய ஐந்து தலைப்புகளில் இப்பயிற்சியானது நடைபெற்றது.

தலைமைத்துவ கிராம பணியாளர்கள் தங்களுடைய கிராமங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 மாணவ மாணவியர்களுக்கு இந்தப் பயிற்சிகளை வழங்குவார்கள்.



# சாதனை சுவடுகள்

# பிரித்திகா யாஷினி





**S. வித்யா நிக்சன்**

சாதிக்க நினைப்பவர்கள் சாதிக்கின்றார்கள். எதுவும் தடையென்று நினைக்காமல் தடைகளை தகர்த்தெறிகிறார்கள். அவர்களையே நாம் சாதனையாளர்கள் என்று போற்றுகின்றோம். எல்லாம் இயற்கைக்கு உட்பட்டு நடந்தால், சாதித்தால் அது இயற்கையோடு இயைந்த சாதனை. இயற்கையும் ஏமாற்றி, சமூகமும் புறக்கணித்த சூழலில் அனைத்து தடைகளையும் தாண்டி சாதிக்கும் ஒரு நபரை நாம் என்ன சொல்வோம். எப்படிக் கொண்டாடுவோம். போற்றுவதைவிட திகைப்போம். அவர்கள் பயணித்த பாதையை நினைத்து தன்னம்பிக்கை கொள்வோம். அவர்கள் தகர்த்த தடைகளை அறிந்து, உத்வேகம் கொள்வோம் அவர்களை உதாரணமாகக் கொண்டு வாழ முற்படுவோம்.

அப்படிப்பட்ட ஒரு நபர்தான் பிரித்திகா யாஷினி. 25 வயது பெண் (அல்ல, தன்னை பெண்ணாக மாற்றிக் கொண்டவர்). இன்று பிரித்திகாவை தமிழ்நாடு கூர்ந்து பார்க்கின்றது. ஆனால் ஒரு சமயம் அவளை திரும்பிக்கூட பார்க்காமல் பெற்றோர்களே புறக்கணித்தனர். ஏனென்றால் பிரித்திகா ஒரு திருநங்கை. ஆனால் இன்று இந்தியாவே அவளைத் திரும்பிப் பார்க்கின்றது. அவள் ஒரு திருநங்கை சப்-இன்ஸ்பெக்டர்.

பிரித்திகா யாஷினி பிறந்தது சேலத்தில். திருவாக்கவுண்டனூர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் வசித்து வருகிறாள். இவரது பெற்றோர் கலையரசன் - சுமதி. அண்ணன் ராகுல்குமார் எம்.சி.ஏ. பட்டதாரி. பிரித்திகாவின் தந்தை விவசாய வேலையும் ஆட்டோ ஓட்டும் வேலையும் செய்கிறார்.

பிறந்தது முதல் சாதாரணமாக இருந்த பிரித்திகா பிளஸ்-1 படிக்கும்போது உடல் மாற்றத்தை உணர்ந்தாள். உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பல மாற்றங்கள், பல குழப்பங்கள், பல முரண்பாடுகள். அவளது மாற்றத்தைக் கண்ட பெற்றோர் அவளுக்குப் பேய் பிடித்திருப்பதாக பூசாரியிடம் அழைத்துச் சென்று காயப்படுத்தினர்.

சமூகம் அவளைப் பார்த்த கண்ணோட்டம் மன உளைச்சலை ஏற்படுத்தியது. தனிமைப்படுத்தப் பட்டதாக உணர்ந்தாள். எனினும் படிப்பில் நாட்டம், காவல்துறையில் சாதிக்க வேண்டுமென்ற லட்சியம் பிளஸ்-2 பொதுத் தேர்வில் 1200க்கு 945 மதிப்பெண் எடுக்க வைத்தது. அரசு கலைக் கல்லூரியல் பி.சி.ஏ. சேர்ந்தாள். கல்லூரி வாழக்கை மேலும் சவாலாக இருந்தது. சக மாணவர்களின் கேலி, கிண்டல், ஒதுக்குதல். பல அடிகள் பின் இழுத்தாலும், எவ்வளவு வேகமாக பின் இழுத்தாலும், அதனினும் வேகமாக இலக்கை அடையும் அம்பை போல் பாய்ந்தாள். லட்சியப் பயணம் தொடர்ந்தது. பட்டப் படிப்பும் முடிந்தது.

வீட்டில் ஆதரவும் அரவணைப்பும் இல்லை, சமூகத்தால் புறக்கணிப்பு, எங்கு சென்றாலும் ஏளனப் பார்வை - இதுவே ஒரு திருநங்கையின் கதி. வீட்டிலும் தன்னை பெண்ணாக மாற்றிக் கொள்ள, ஆடை அணிந்து கொள்ள தடை, பிரச்சனை, மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளான பிரித்திகா ஒரு கட்டத்தில் வீட்டைவிட்டு வெளியேறினாள்.

அர்ச்சனா என்ற திருநங்கையின் நட்பு பிரித்திகாவுக்கு கிடைத்தது. திருநங்கைகள் பற்றி ஒரு தெளிவு, அவர்களின் நிலை, வாழ்க்கை, அவலம், சித்திரவதை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. எனினும் பிரித்திகா மனம் தளரவில்லை. மற்ற திருநங்கைகள் போல் தன் வாழ்க்கை லட்சியத்தை மாற்றிக்கொண்டு தடம் மாறவில்லை. லட்சியத்தையே குறிக்கோளாகக் கொண்டு தன் பாதையில் தெளிவோடு நடந்தாள்.

திருநங்கையாக இருப்பதனால் தன்னம்பிக்கை இல்லாமல் இருக்கக்கூடாது, தன்மானத்தை இழந்து வாழக்கூடாது. யாரிடமும் கையேந்தாமல் கண்ணியத்தோடு வாழவேண்டும். பிறந்த நாட்டிற்கு தன்னால் முடிந்ததை செய்ய வேண்டும் என்று மன உறுதிகொண்டாள் பிரித்திகா.

சப்-இன்ஸ்பெக்டர் தேர்வுக்கான அழைப்பைக் கண்டதும் எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு முழு முயற்சியோடும் தேர்வுக்கு தன்னை தயார் செய்தாள். அந்த விண்ணப்பம் பூர்த்தி செய்யும் பொழுதிலிருந்து தொடங்கியது சாதனைக்கான சோதனைகள். முதலில் விண்ணப்பத்தில் இரண்டு பாலினமே உள்ளது. மேலும் அவள் தன் ஆண் பெயரை கெஜட்டில் பிரித்திகா யாஷினி என்று மாற்றி விட்டாள். ஆதலால் விண்ணப்பத்தில் மூன்றாம் பாலினம் இல்லாததால் பெண் என்று டிக் செய்தாள். அவள் ஒரு திருநங்கை. அவள் பெயர் மற்றும் நிலை அறிந்து அவளின் விண்ணப்பத்தைப் புறக்கணித்தது காவல்துறை தேர்வாணையம். பிரித்திகா அதற்காக சற்றும் மனம் தளராமல் சப்-இன்ஸ்பெக்டர் தேர்வு எழுதியே ஆக வேண்டும் என்ற முனைப்போடு வக்கீல் பவானி சுப்ராயன் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகினாள். நீதிமன்றம் அவளை தேர்வு எழுத அனுமதித்தது. பிரித்திகாவின் தடைகற்கள் தகர்த்தெரியப்பட்டது. உடல் தகுதி தேர்விலும் நேர்காணல் தேர்வு ஆகியவற்றிலும் ஜெயித்தாள். உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், கிரிக்கெட், பந்து எறிதல் போன்ற அனைத்து தேர்வுகளிலும் தேர்வானாள்.உடல் தகுதி, நேர்காணல் தேர்வுகளின் அறிக்கை காவல்துறை மூலம் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இந்தியா திரும்பிப் பார்க்கும் ஒரு சமுகத்திற்கே தன் நம்பிக்கை கொடுக்கும், ஒரு புதிய பாதைக்கு வழி வகுக்கும் தீர்ப்பு வழங்கப்பட்டது. **பிரித்திகா இந்தியாவின் முதல் திருநங்கை - சப்-இன்ஸ்பெக்டர் ஆனாள்.**

சோதனைகள் அனைத்தையும் சாதனையாக மாற்றிக் கொண்டது மட்டும் அல்லாமல், தன்னகத்தே இருந்த குறைகள் எல்லாவற்றையும் நிறைகளாக்க முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றாள். இதன் மூலம் ஒரு திருநங்கை சமூகத்திற்கே நம்பிக்கையான வழிகாட்டியாகியிருக்கிறாள்.

ஒதுக்கப்பட்டவர்கள், நிராகரிக்கப்பட்டவர்கள், ஏளனப்படுத்தப்பட்டவர்கள், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் என்று பல அடையாளங்கள் கொண்ட திருநங்கைதான் பிரித்திகா யாஷினி. இன்று ஒரு காவல்துறை பணியாளர். இத்தகைய சோதனைகளை கடந்து தடைகற்களை தகர்த்த நிகழ்வு திருநங்கைகளுக்கு மட்டுமல்ல, நமக்கு ஒரு அருமையான உதாரணமாகும்.

**தடைகளையும், தடை கற்களையும் தாண்டி யாரும்**
**தகுதியான தலைவனாகலாம்.**
**தகுதிபடுத்திக் கொள்வோம், தலைவனாவோம்.**

# குழந்தைகளை காக்க உலகத் தலைவர்கள் உதவவேண்டும்

**டேவிட் பெக்காம்**




போர் மற்றும் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை காக்க உலகத் தலைவர்கள் உதவிட வேண்டும் என்று பிரிட்டன் முன்னாள் கால்பந்து வீரர் டேவிட் பெக்காம் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நியூயார்க்கில் நடைபெற்ற வருகிறது. பிரிட்டன் கால்பந்து அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் கூறுகையில்: தென் ஆப்பிரிக்காவில் ஹெச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தையை பார்த்துள்ளேன். பிலிப்பைன்ஸில் சூறாவளியின் கோரத் தாண்டவத்தால் உடைமைகளை இழந்த குழந்தைகளை கண்டேன். கம்போடியாவில் வன்முறையால் வாழ்விழந்த சிறார்களை பார்த்துள்ளேன். இதுபோன்று உலகம் முழுவதும் பல்வேறு காரணங்களினால் குழந்தைகள் அல்லல்படுவதை கண்டு எனது மனம் நொறுங்கிப் போயுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் போர், வன்முறை, ஏழ்மை ஆகியவற்றிலிருந்து விலகி ஆரோக்கியமான வளர்ச்சியை பெற வேண்டும். பிரகாசமான எதிர்காலம் வேண்டும் என்று அவர்கள் எல்லாவிதமான சோதனைகளையும் எதிர்கொள்கிறார்கள். குழந்தைகளின் அந்தக் கனவை நிஜமாக்க நமக்கு இந்த ஆண்டு கிடைத்துள்ளது. நாம் அனைவரும் ஒருங்கிணைந்து அவர்களின் வாழ்வில் முன்னேற்றம் காண உழைத்திட வேண்டும் என்று தெரிவித்தார்.

யுனிசெப்பின் தூதுவராக இருக்கும் டேவிட் பெக்காம் குழந்தைகளின் நலனுக்காக தொடர்ந்து நிதி திரட்டி வருகிறார். பிலிப்பைன்ஸில் சூறாவளி தாக்கியபோது பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வுக்காக 54 மில்லியன் யூரோக்களை அவர் தனிப்பட்ட முறையில் அளித்தது குறிப்பிடத்தக்கது.



# விளையாட்டுத் துறையில் நான் பெற்றுக்கொண்ட தலைமைத்துவம்

**S. அருளரசி**

நான் 6-ம் வகுப்பிலிருந்து விளையாட்டுத் துறையில் விளையாடி வருகிறேன். நான் இந்த விடுதிப் பள்ளியில் படிக்காமல் இருந்திருந்தால் இப்படிப்பட்ட ஓர் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைக்காமல் இருந்திருக்கும். விளையாடுவதற்காக முதலில் சென்றபோது மிகவும் பயமாக இருக்கும். வாலிபால் விளையாட்டு மட்டும்தான் தெரியும். ஒவ்வொரு முறையும் மைதானத்திற்குள் போகுமபோதும், ஏன் விளையாட வந்தோம் என யோசித்ததுண்டு. ஒரு சில நேரத்தில் வெளியே நின்று வேடிக்கை பார்த்திருக்கிறேன். நானும் மற்றவர்களை போல நன்றாக விளையாட வேண்டும் என்ற ஆசை மட்டும்தான் இருக்கும். ஆனால் அதனை செயல்படுத்துவது என்பது எனக்கு மிகவும் கடுமையானதாகவே இருந்தது.

அதன்பிறகு என்னுடைய விளையாட்டு ஆசிரியர்கள் மூலம் சிறு சிறு விஷயங்களை கற்றுக்கொண்டேன். இரண்டு வருடத்திற்கு பிறகு தலைமைத்துவ பயிற்சியில் கலந்து கொண்டேன். பயிற்சியின் மூலம் எனக்கான தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டேன். இதனை நான் கற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் என்னுடன் விளையாடும் என் நண்பர்களுக்கும் கற்றுக் கொடுத்துள்ளேன். தன்னம்பிக்கையுடனும், தைரியத்துடனும் விளையாடினால் எந்தவித உயரத்தையும் அடையலாம் எனக் கூறினேன். அதன்பிறகு ஒவ்வொரு ஆண்டும் குறுமையம், வட்டம் அளவிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றிப் பெற்றுள்ளோம். ஒரு சில நேரங்களில் தோற்றும் இருக்கிறோம்.

ஆனால்...

அந்தத் தோல்வியைக் கண்டு சில நேரங்களில் சண்டைகள் போடுவதுண்டு. ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொள்வோம். சண்டையில் சில சமயம் குழுவில் ஒற்றுமை இருக்காது. கருத்து வேறுபாடுகள் அதிகமாக இருக்கும். தோல்வியை சாதாரணமாக எடுத்துக் கொள்ள மாட்டோம். அதற்கு காரணமானவரிடம் சண்டை போடுவதுண்டு. ஒரு சில வேளையில் என் நண்பர்கள் இனி நான் விளையாடவே போவதில்லை என்று கூறியதுண்டு. பிறகு நான் என் நண்பர்களுக்கு சில காரியங்களை எடுத்துக் கூறி அவர்களை தைரியப்படுத்துவேன். விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் வீரர்களுக்கு அழகு என்றபடி அடுத்து நன்றாக பயிற்சிக்கு வரவழைப்பேன். பயிற்சியில் கடுமையாக போராடுவோம்.

எங்கள் குழு ஒற்றுமையுடன் செயல்பட்டால் முன்னேறலாம் என்று கூறி நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டில் இரண்டாம் இடத்தைப் பெற்றோம். இதற்குக் காரணம் அவரவருள் இருந்த தைரியமும், தன்னம்பிக்கையும் தான் இதற்கு முழு காரணம் தலைமைத்துவ பயிற்சிதான்.

**கவலையை நினைத்து கண்ணீர் சிந்துவதைவிட**
**இலட்சியத்தை நினைத்து வியர்வை சிந்துங்கள்**
**உங்களால் வெற்றி பெற முடியும்!!!**



# CCMC குழுவில் என்னுடைய அனுபவம்

**M.K. கீர்த்தனா**

குழந்தைகள் மையப்படுத்திய மேலாண்மைக் குழுவில் கடந்த வருடத்தில் ஓட்டுகள் மூலம் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். பள்ளிப் பருவத்திலே மன உறுதியும், தலைமைத்துவத்தையும் கற்றுக் கொண்டேன். மாணவிகளை வழிநடத்தவும், சிறந்த தலைவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் கற்றுக் கொண்டேன். நமக்கு வரும் பெரும் பிரச்சனைகளை சாதாரணமாக எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்றும் கற்றுக் கொண்டேன்.

இதுவரை நான் முன்னால் சாலையோரங்களில் உள்ள விளம்பரங்களில் 1098 பார்த்ததும் கவனிக்காமல் வந்துவிடுவேன். CCMC பயிற்சியில் Government-ல் இப்படி ஒன்று குழந்தைகளுக்கு இருக்கு என்று தெரிந்து கொண்டேன். மற்றொருமுறை அந்த விளம்பரத்தில் பார்க்கும்போது உற்று நோக்கி கவனிக்கத் தோன்றுகிறது.

இந்த அமைப்பின் மூலம் எங்கள் விடுதி பிள்ளைகளின் நிறைகுறைகளை சரிசெய்ய என்னால் முடிந்தது. சென்ற வருடம் சுகாதாரக் குழுவின் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். சுகாதரக் குழு தலைவர், உதவித் தலைவர், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து ஆலோசித்து மருத்துவ முகாம் மற்றும் பல் பாதுகாப்பு முகாம் நடத்தினோம். இதற்காக எங்கள் விடுதி மேலாளர் எங்களுக்குத் தேவையான அனைத்தையும் வாங்கிக் கொடுத்து உதவினார். இந்த இரண்டு முகாம்களிலும் நானும் என் குழு பிள்ளைகளும் இணைந்து மிகச் சிறப்பான முறையில் முகாம் நடைபெற உதவி செய்தோம்.

இந்த வருடம் ஆன்மீகக் குழுவின் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். சென்ற வருடம் போலவே இந்த வருடமும் என் பணியை சிறப்புடன் செய்து வருகிறேன். இந்த குழந்தைகள் மையப்படுத்திய மேலாண்மை குழு என்ற அமைப்பும் நான் சிறந்த தலைவியாய் செதுக்கப்பட்டுள்ளேன்.

இந்தத் தலைமைத்துவத்தை விடுதியில் மட்டுமல்லாமல் என் வாழ்விலும் பயன்படுத்துவேன்.

**வரலாறு ஒருநாள் மாறும்**
**அது உன்னால் மட்டுமே முடியும்**

மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான செய்தி மடல் 2

டிசம்பர் 2015










தலைமைத்துவ பயிற்சி

**வல்லரசு ஆகும் விரைவில் இந்தியா என்று**
**வாக்குரைத்தார் கலாம் நம்பிக்கையில் அன்று!**
**அவர் நம்பிக்கை என்றும் மாணவர்கள் மீது**
**அதை மனதில் கொண்டால் நாளை நமது!**



சீரிய சிந்தனை மாணவர்க்கு வேண்டும்
சிறந்த நல்லொழுக்கம் மனதில் வேண்டும்

தோல்விக்கு கலங்கா நெஞ்சம் வேண்டும்
தோல்வியை வெல்லும் சூட்சுமம் வேண்டும்

பார்க்கின்ற அனைத்தையும் பகுத்தறிய வேண்டும்
பாராத காட்சிகளை சுவையாக்க வேண்டும்

பெற்றோர் சொல்கேட்கிற பிள்ளையாக வேண்டும்
பெரியோரை மதிக்கின்ற பக்குவம் வேண்டும்

கற்பதை கசடற கற்றல் வேண்டும்
கற்றலை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும்

வருங்கால இந்தியா மாணவதலைவர்கள் கையில்
வளமாக மாற்றுவோம் இப்பள்ளி பருவத்தில்!

**P. பவித்ரா,** XII-A

## கனவு

Communication Address:
**Mr. Sundar. G.** Executive Director
**ALC-Schools Project,** Siloam, Tirukoilur - 605 757
sunmatt91@gmail.com ; shyletmoni@gmail.com

DTP : Meribah Screens, Cuddalore
Printed at : GM Sentil Paper Marts, Cuddalore